**செய்தி வெளியீடு எண்: 099** **நாள்: 04.02.2020**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (4.2.2020) தலைமைச் செயலகத்தில், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை சார்பில், ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையம் முன்புறம் ஜி.எஸ்.டி சாலையில், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நிதியுதவி வழங்கப்பட்டு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் 9 கோடியே 7 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நடைமேம்பாலத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பில், பெருகி வரும் வாகன போக்குவரத்தினால் பல்லாயிரக்கணக்கான பாதசாரிகள் சாலையினை பாதுகாப்பாகவும், எளிதாகவும் கடக்க மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், பல நடைமேம்பாலங்கள் தேவை என கண்டறியப்பட்டது. அவ்வாறு கண்டறியப்பட்டவைகளில், ஜி.எஸ்.டி. சாலையில் உள்ள ஆலந்தூரில் நடைமேம்பாலம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இரண்டு வழித்தடங்களும் உயர்மட்ட நிலையில் ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையத்தில் சந்திக்கின்றன. இங்கு ஒருவழித்தடத்திலிருந்து மற்றொரு வழித்தடத்திற்கு எளிதாக மாறிச் செல்லும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மெட்ரோ இரயில் நிலையத்திற்கு முன்புறம் உள்ள அதிக போக்குவரத்துமிக்க ஜி.எஸ்.டி சாலையின் எதிர்புறத்தில் உள்ள ஆசர்கானா பேருந்து நிறுத்தத்திற்கு பயணிகள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பாக சென்றடைவதற்கு ஒரு நடைமேம்பாலம் பயனுள்ளதாக அமையும்.

ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையம் முன்புறம் ஜி.எஸ்.டி சாலையில், இந்த நடைமேம்பாலம் அமைக்கும் பணிக்காக, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நிதியுதவி வழங்கப்பட்டு, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால்

9 கோடியே 7 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நடைமேம்பாலத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

இப்புதிய நடைமேம்பாலம் 55.41 மீட்டர் நீளமும், 6.41 மீட்டர் அகலமும் கொண்டது. மேலும், பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு மின்தூக்கிகள், 4 நகரும் படிக்கட்டுகள், சிசிடிவி கேமராக்கள், நடைபாதையின் அனைத்து பகுதிகளிலும் எல்.இ.டி. மின்விளக்குகள், மாற்றுத்திறனாளிகள் நடைபாதையிலிருந்து மின்தூக்கிக்கு செல்வதற்கு ஏதுவாக சாய்தளம் மற்றும் நடைபாதையில் எவர்சில்வர் கைப்பிடிகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் டாக்டர் த. கார்த்திகேயன், இ.ஆ.ப., சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. பங்கஜ் குமார் பன்சல், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9